# அன்பு மனம்

குழந்தை வீரிட்டு அழுதது கேட்டு, ஓடோடினேன், கூடத்திற்கு. ஐயோ, திடுக்கிட்டுப் போனேன்! நான் அங்கே போனபொழுது அழுகைச் சத்தம் இல்லை. குழந்தைக்குக் காக்காய் சீவன் போய்விட்டது. ஆம்! முகம் கறுத்திற்க, கழுத்து நிமிர்ந்திருக்க, கண்கள் திறந்திருக்க, குழந்தை நிலை குத்திப் போயிருந்தது. ஓடிப்போய்க் குழந்தையின் காதுகள் இரண்டையும் பொத்தினேன். அப்படியும் அவள் குரல் கிளம்பவில்லை. ஒரு நிமிஷம், நாலு நிமிஷங்கள் ஆயின. ஐயோ, குரல் விட்டு அழவேணுமே! . . . .யாரும் இல்லையா? என்ன ஆகுமோ? . . . திகிலுடன் சுற்றும் முற்றும் பார்த்தேன்.

"அதோ, அவர்!" என்று கண்டுகொண்ட என் மனம் ஒரு நிமிஷம் துணுக்குற்றுவிட்டது. சட்! பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருக்கிறாரே! என்ன புருஷ சுவாபம்! பின் ஏன் அவர்களுக்கு மட்டும் உறுத்தாது? ஒரு நிமிஷம் சாம்பராக வெந்துவிட்ட து என் உள்ளம். மறுகணம், குழந்தையின் தொண்டை விட்டுக்கொண்டபிறகு, அதே சாம்பர், திருநீறுபோலப் புனிதமாகிவிட்டது. அதை நானே உணர்ந்தேன். ஆம்! நிஜம்தானே? அவர் என்ன கண்டார்? குழந்தையின் அழுகைதான் நின்றுவிட்டதாக்கும் என்று எண்ணியிருப்பார்! எனக்குத் தம்பி தங்கைகள் உண்டு; அவர்களுடன் பழகியதால் குழந்தைத் தத்துவம் கொஞ்சம் தெரியும்.

நிலை கட்டிப் போயிருந்த குழந்தையின் மூச்சுத் திரும்பி வந்தபோது, என் மூச்சும் திரும்பியது. "அப்பா! நல்லவேளை!" என்ற பேச்சுக் கேட்டது. சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள விரும்பித் திரும்பிப் பார்த்தேன், ஆம்! அவர்தான் சொல்லியிருக்கிறார் அவ்வாறு. சற்றுமுன் ரேடியோவுக்கு அருகில் அந்த நாற்காலியில் அமர்ந்தும், அமராததுமான நிலையில் இருந்தவர், இப்பொழுது சாய்ந்துகொண்டிருந்தார். ஆம்! அவர் கவலை நீங்கியிருந்தார். குழந்தையின் நிலைமை தெரிந்திருந்ததும் என்ன செய்வது என்று தெரியாமல் கவன்றிருக்கிறார், பாவம்! அவருக்கும் கொள்ளை ஆசைதான் உள்ளூற, குழந்தையிடம், ஆனால், பாவம் புருஷர்; ஒன்றும் தெரியாது. நான் பெண் - ஆம் - என்னால் நடந்துகொள்ளமுடிவதுபோல் அவரால் நடக்கமுடிகிறதா? குழந்தையின்மேல் குன்றளவு பிரியம் இருந்தாலும், அது பிறருடைய மதிப்பிலே குன்றாதபடி அவரால் _நடந்துகொள்ள முடிவதில்லையே!

ஏதேதோ தோன்றினாலும், என் பெண்மை மட்டும், என் சிறுமை, வருத்தம் எல்லாம் மறந்து, ஒரு சில நிமிஷம் பெருமிதம் கொண்டது. குழந்தையின் குரல் வெளிப்படுமாறு செய்துவிட்டேனே - எனக்கு ஆறுதல் மட்டும்தானா? கொள்ளைப் பெருமையாகவும் இருந்தது. ஜம்மென்று குழந்தையை இடுப்பில் இடுக்கிக்கொண்டேன். அவரை நுனிக் கண்ணாலே நோக்கினேன். அவர் என் தோற்றத்தை - குழந்தையுடன் நிற்கும் என் தோற்றத்தை - ரசிக்கிறார் என்று தோன்றவே, எனக்கு உடம்பெல்லாம் பூரித்தது. அவருடன் ஒன்றும் பேசாமலே போய்விட மனமில்லாதவளாய், அத்தனை நேரமும் கேட்க மறந்திருந்த அந்தக் கேள்வியைக் கேட்டேன்: "ஆமாம்! என்ன ஆச்சு பாலாவுக்கு? ஏன் அழுதாள்? எங்கானும் அடிப்பட்டுக்கொண்டுவிட்டாளா?"

"நான் அடிச்சுட்டேன்!"

'ஐயோ! என்ன சொல்கிறார்? ஏன் என்னை இவர் வதைக்கிறார்? ஐயோ! நிஜமாகவா? அடித்தாரா?'

அவரை ஒரே ஒரு தடவை கூர்ந்து பார்த்துப் புருவம் சுளித்து, என் அருவருப்பு, வேதனை, கோபம் எல்லாவற்றையும் ஒரே நிமிஷத்தில் குறிப்பிட்டுவிட்டு, சமையலறை புகுந்தேன். என்னால் தாளவே முடியவில்லை, அவருடைய இந்த இங்கிதம் இல்லாத செயலை; இத்தனை நாள் மிரட்டலோடு இருந்தார்; இப்போது . . .

அப்பொழுது மன்னி வந்துவிட்டாள், ஸ்நானம் முடித்துக்கொண்டு. என் ஓர்ப்படியைப் பார்க்கவே மனம் கூசியது எனக்கு.

"என்ன லலிதா? குழந்தை அழுதாளா? ---- என்ன, நீயும் அழுகிறாயா என்ன?" என்று கேட்டாள் மன்னி. மனத்துடிப்புத் தாங்காமல் சொன்னேன் சேதி. குழந்தையின் நெஞ்சுக்குழியில் விம்மலும், மோவாயின் துடிப்பும் இன்னும் அடங்காத காரணத்தை விவரித்துச் சொன்னேன்.

மன்னி அதிகம் ஒன்றும் சொல்லவில்லை. அவளுடைய கண்களும் முகமும் மட்டும் ஒரு தினுசான வியப்பையும் சுணக்கத்தையும் வெளிப்படுத்தின. 'எல்லாம் தெரிந்த விஷயம்தானே!' என நினைப்பவள்போல் மன்னி இருந்ததுதான் எனக்கு, அழுகை கொடுக்கக்கூடிய வேதனை யூட்டிற்று.

அதே சமயம் சமயலறையின் நிலைப்படி யருகில் அவர் வந்து நின்றார்.

"என்னமோ என்னை அறியாமல் மூர்க்கமாய் அடிச்சுட்டேன். நியூஸ் கேட்டிண்டிருந்தேன். ஏதோ கேட்டாள் குழந்தை. பளீர்னு பட்டுடுத்து. அதுவும், பாவம், கன்னத்திலே! பாவம், துடிச்சுப் போயிட்டாள். நான் இப்படி அடிப்பேன்னு அவள் நினைக்கிலே, மன்னி!"

மன்னி அவரை ஏறிட்டுப் பார்த்தாள், அவர் பேசி முடிந்த சமயம். மன்னிப்புக் கேட்கவும், மன்னிப்புப் பெறவுந்தான் இருவருக்கும் உறவு அமைந்திருக்கிறதே!

எனக்கு இப்படித்தான் தோன்றிற்று. மன்னி அவ்வாறு எண்ணியிருப்பாரோ என்னவோ தெரியாது. எனக்கு மன்னிமீது கோபம் இல்லை. அவர்மீதுதான் கோபங் கோபமாய் வந்தது, கொஞ்சம் யோசனை வேண்டாமா மனுஷருக்கு? சொந்தக் குழந்தையானால்கூட அப்பா அடித்தால் அம்மாவுக்கு ரோசம், அம்மா அடித்தால் அப்பாவுக்கு ஆத்திரம் என்று ஏற்படுகிறதே! மன்னி தாக்ஷிண்யம் பார்க்காமல் பட்டென்று சொன்னால், அப்பொழுது தெரியும் இவருக்கு; இவரோடு நானும் போகவேண்டிய சிரிப்பாணி நிலை! வேலைவெட்டி ஒன்றுமின்றி, உண்டு உறங்கிக் கிடந்து 'நியூஸ்' கேட்டுவிட்டு வம்பு அளக்கும் நிலைமை அவருக்கு இப்பொழுது. சதா யோசனை, கவலை, அடிமை வாழ்வு, சிறுமை, எனக்கு! ஏதோ மானம் மரியாதையாக, 'நியாயமாக அண்ணனுடன் இருக்கிறதுதான்' என்கிற பழையகால நியாயத்தையொட்டி இருந்துவருகிறோம். யாருக்கு யார் உரிமை, யாரோடு இருக்க யாருக்கு நியாயம் இந்நாளில்?

எல்லோருக்கும் அவரவர் சுதந்திரம், வாழ்க்கை, வேண்டும். அவரவர் குடும்பம், கவலை என்று ஏற்பட்டுவிட்டன. எங்களுக்கு குடும்பம் என்று ஏற்படாவிட்டாலும், அவர்களுக்குப் பாரமாக நாங்கள் ஒரு குடும்பந்தானே இருக்கிறோம்?

பார்க்கப்போனால் அவர்களுக்கும் எங்களால் எத்தனை கஷ்டம்! இப்போது பளிச்சென்று தன் மனத்தைத் திறந்து ஒரு வார்த்தைச் சொல்ல மன்னிக்குந்தான் ஏது சுதந்திரம்? இதோ, பாவம், மன்னி, அவர் பேச்சைக் கேட்டுக்கொண்டே இருக்கிறாள். ஒன்றும் பேசாமல் குழந்தையை எடுத்துக் கொள்கிறாள்.

"மன்னி, குழந்தையை என்னண்டை தாயேன், இனிமேல் எங்கிட்ட வரவே மாட்டாளோன்னு பயமா இருக்கு" என்றார் அவர்.

மன்னி குழந்தையை அவர் பக்கம் எடுத்துப்போனாள். "இந்தாங்கோ -- குழந்தை இதெல்லாம் என்ன கண்டாள்? வராதெ என்ன? இந்தம்மா, பாலா! போம்மா! சித்தப்பா கிட்டப்போ. கூப்பிடறா பாரு." குழந்தையை அவர் பக்கம் தூக்கிக்கொடுத்தாள் மன்னி. ஆனால், ஐயோ, இதென்ன சோதனை? ஏன் குழந்தை அவரிடம் போக ஆவல் காட்டவில்லை? முகத்தை அம்மாவின் தோள் பக்கமாய்த் திருப்பிக்கொண்டுவிட்டாளே?

மன்னிக்குத் திருப்திதானோ என்னவோ? தான் சொல்லமுடியாததைத் தன் குழந்தையின் செய்கை அறிவுறுத்துகிறதல்லவா? அவருக்கு முகம் ஒருமாதிரி ஆகிவிட்டது.

மன்னி, லேசாகச் சிரித்துக்கொண்டே, அதை மறக்க முயன்றுகொண்டே, "ஏண்டி கண்ணு! போம்மா! ஒண்ணும் பண்ணமாட்டா போ!" என்றாள். ஒரு தடவை மீண்டும் தன் சிற்றப்பாவைப் பார்த்தாள் குழந்தை. ஆனால் அவரிடம் போக மட்டும் மறுத்துவிட்டாள்.

"இவளுக்கு எண்ணை தேய்த்துக் குளிப்பாட்டி விடணும். அழுகையோடு அழுகையாகச் சேர்த்துக் குளிப்பாட்டி உங்களண்டைத் தரேன். ஒரு அரைமணி கழித்து வந்துடுவள், உங்க கிட்ட" என்று மன்னி கூறவே, அவர் அதற்கு ஒப்பி, அங்கிருந்து போய்விட்டார்.

என் உள்ளத்திலே பல்வேறு உணர்ச்சிகள் எழ, "மன்னி, நீங்களாக் கொண்டு சும்மா இருக்கேள். வேறே யார் இப்படி இருப்பா?" என்றேன். ஆம்! மன்னிக்கு மனத்தாங்கல் உண்டு என்று அறிந்_ம், இப்போதும் மன்னி மனத்திலே வருத்தம் ஏற்பட்டது என்று உணர்ந்திருந்தும், மன்னி பெருந்தகைக் குணம் கொண்டவள் என்பதே என் உறுதி. இதுகூடா தோன்றாதா ஒரு பெண்ணுளத்திலே? இதுகூடா நினையாளா ஒரு அன்னை?

இதே யோசனையில் என் அந்தரங்கம் சுழற்பட்டுக் கிடந்தாலும், நான் என் மனநிலையை அதிகம் காட்டாமல், குழந்தையை எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டினேன். மன்னியுடன் இழைந்து சென்றேன். என் மைத்துனர் வந்தார் பிற்பகலில். நானே செய்தியைச் சொல்லிவிட்டேன்.

மைத்துனர், குழந்தையையும் அவரையும் மாறிமாறிப் பார்த்தார். பிறகு, "பாவம், மனசு அவனுக்கும் சரியில்லை. ஏதோ கவலைப்பட்டுண்டிருக்கான். ஏதோ யோசனையில் இருந்திருப்பான்; இவள் லூட்டியடித்திருப்பாள்;விஷமி!" என்றார் அவர்.

மன்னி எதைச் சொல்ல விரும்புவாளோ அதை நானே சொல்லிவிட்டேன்.

"பாவம், அது ஒண்ணும் லூட்டி அடிக்கலை! நியூஸ் கேட்டுண்டிருந்தாராம்! குழந்தை ஏதோ கேட்கப் போனாளாம். இவர் . . . "

நான் முடிப்பதற்குள் கணவரே நடுப்புகுந்துவிட்டார். "ஆமாம்! யோசனை ஒண்ணுமில்லே. நியூஸ் சமயம் ஏதோ கேட்டாள்; கையை ஓங்கின வேகத்திலே கை நிற்கவில்லை. அடி விழவே விழுந்துடுத்து, பாவம்!" என்றார்.

அவர் சொல்ல முன்வந்தது எனக்கு இஷ்டம் தான். ஆனால் "யோசனை ஒன்றும் இல்லே!" என்பானேன்? வெட்டியாக இருப்பவர், அக்கடாவென்று இருப்பதாகச் சொல்லிக்கொள்ள வேணுமா? உள்ளூர அவருந்தான் புழுங்குறாரே? . . .

ஆனால் அவருடைய நேர்மையான வார்த்தைகளும் தாழ்மையான கம்பீரப் பேச்சும் குழந்தைகளுக்குத்தான் பிடித்திருந்தன போலும்! கொஞ்ச எட்ட நின்று கொண்டிருந்த பாலா, மெல்ல "சித்தப்பா" என்று வாய்திறந்தாள்.

"வா, உக்காச்சு, வா!" என்று அவர் அழைத்தபோது, சிறிது தயங்கிவிட்டு, பிறகு சிரித்தவாறே, ஓரக்கண்ணால் பார்த்தவாறே அவர் பக்கமாக வந்து நின்றுவிட்டு, திடுக்கென்று அவர் மடியிலே புதைந்து உட்கார்ந்துவிட்டாள் பாலா!

எங்களை ஏதோ சிம்மாசனத்தில் ஏற்றிவைத்தாற்போல் இருந்தது அவள் செய்கை.

உண்மையாகவே, சிலநாட்களுக்கெல்லாம் எங்கள் நிலைமை உயரத்தான் உயர்ந்தது. நாங்கள் முன்போலக் குடியும் குடித்தனமும், இன்பமும் இல்லற சுகமுமாய் வாழத்தொடங்கினோம். அவருக்கு உத்தியோகம் கிடைத்தது. நாங்கள் 'எங்கள் வீடு' என்று பெருமையோடு ஒன்றை ஸ்தாபித்துக்கொண்டு வாழலானோம், வேறொர் ஊரிலே.

இப்படி ஒரு ஒன்றரை வருஷம் சந்தோஷமாக இருந்துவிட்டோம். 'நாங்கள் பெற்றெடுத்த குழந்தை' என்று சொல்லிக்கொள்ளக் குழந்தை இல்லை என்ற ஓர் எண்ணம் இருந்துவந்ததெனினும், நாங்கள் இருவரும் குறைப்பட்டுக் கொள்ளவில்லை. பாலா எங்கள் குழந்தைதானே? இப்பொழுது அவளுக்கு ஒரு தம்பியும் பிறந்துவிட்டானே! அவர்கள் இருவரையும் எண்ணி மகிழ்வோம். நினைத்துப் பார்த்து உவகை கொள்வோம். என்னதான் இருந்தாலும் குழந்தை மனம் அன்பு நிறைந்தது என்று, பாலாவுக்கு எங்கள் மீதிருந்த அன்பை நினைத்து ஆறுதல் கொள்வோம்.

ஆனால் இதெல்லாம் அந்தி அழகுபோல் ஆயிற்று. வெகு சீக்கிரத்திலே எங்கள் மனச்சாந்தியை மாசுறுத்தி, என் மன அமைதியைக் குலைக்க ஒரு தகவல் வந்தது. என் பெற்றோரும், என் மன்னியின் பெற்றோரும் இருக்கும் ஊர்கள் அக்கம் பக்கம். அம்மா என் ஓர்ப்படியின் பிறந்தகம் போக நேர்ந்தது. பாலா அங்கே தன் தாயைப் பெற்ற பாட்டியின் வீட்டில் இருந்தாள். அம்மா அவளைப் பார்த்ததாகச் சொல்லவே நான் ஆஹா, என்ன ஆவலுடன் அவளைப்பற்றி விசாரித்தேன்? ஆனால் அந்தோ, அம்மா என்ன சொன்னாள்? சொல்லும் பொழுதே அவளுக்கே என்ன வேதனை?

பாலா வெகு சமர்த்தாய், சூடிகையாக இருக்கிறாளாம். ஐந்து வயசுக் குழந்தைக்கு இருக்கவேண்டிய சுறுசுறுப்பு, கலகலப்பு, இம்மிகூடக் கம்மியில்லையாம். ஆனால் அம்மா அவளை, "சித்தி எங்கே, சித்தப்பா யாரு?" என்று கேட்டபோது, "நியூஸ் கேட்கும்போது அடிச்சாளே, அதுதான் சித்தப்பா" என்றாளாம். "என் கண்ணுலே சீக்காய்ப் பொடி போடுவாளே, அதுதான் சித்தி!" என்றாளாம்!

"யார் கேட்டாலும் இப்படித்தான் சொல்லுகிறாள்!" என விளக்கிவிட்டாளாம் மன்னியின் அம்மா.

அம்மா எனக்கு, தான் அறிந்த உபதேசம், கண்டனம், விமர்சனம், எல்லாம் செய்தாள், தன் கடமையை எண்ணி. ஆனால் எனக்கு துக்கம் துக்கமாக வந்தது.

ஆஹா, குழந்தை எதையும் மறந்துவிடவில்லை. சிற்றப்பா அடித்ததை மறக்கவில்லை, "ஏண்டி கண்ணூ, சித்தி உன் கண்ணிலே சீக்காய்ப் பொடி போட்டுட்டேனா?" என்று அவளுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டிய பொழுதெல்லாம் நான் கேட்டுவந்த அந்தக் கேள்வியையும் மறந்துவிடவில்லை!

ஒரு குழந்தையின் மனதிலே எங்களைப்பற்றித் தாழ்வான எண்ணம்! 'பாலா எங்களை எல்லாம் மறந்திருக்கக் கூடாதா?' என்றுகூட வருந்தத் தொடங்கினேன் நான்!

அவரிடம் சொன்னேன்; எங்களை அவள் மறவாத விதத்தை அறிவித்தேன். அவர் கொஞ்ச நேரம் வருத்தப் பட்டார். கொஞ்ச நாள் நினைவு வைத்திருந்தார். பிறகு, எனக்குத்தான், பெண் ஜன்மம் எடுத்த தோஷம், வேதனை, யோசனை, கற்பனை.

"ஆஹா! நமக்கு என்று குழந்தைகள் இருந்தால், இந்த நம் ஆசை, அன்பு எல்லாம் இப்படி மதிப்பிழந்து போகுமா?" என்று தோன்றிற்று. சரியான விடையும் ஊகித்துக்கொண்டேன்.

என் மனதுக்குள்ளேயே பொருமிக்கொண்டிருந்ததனால்தானோ என்னவோ, திடீரென்று எனக்கு ஒர் ஆசை பிறந்தது. பாலா, தன் பெற்றோரிடம் வந்துவிட்டாள் என்று தெரியவே, ஆசையை நிறைவேற்றிக்கொள்ள சந்தர்ப்பம் சரியாக இருந்தது. அதன் பயனாக நாங்கள் இருவரும் என் மைத்துனர் வீட்டுக்குப் போனோம்.

எங்கள்மீது விருப்பற்றுப் போய்விட்ட பாலாவின் மனத்தில் அன்பு ஊற்று உண்டாக்க வேண்டும் என்று போனோம். அவள் வயது முதிரவில்லை; மனம் முதிரவில்லை; வெறுப்பை நீக்கி, விருப்பு ஆக்கி, அன்பை வளர்ப்பது கஷ்டமல்ல என்ற தைரியத்துடன் போனோம்.

வாசலிலேயே காட்சியளித்த பாலா, எங்களைக் கண்டதும், "சித்தப்பா, சித்தி!" என்று ஆரவாரம் செய்து குதிப்பதைப் பார்த்து நான் ஒரு கணம், "என்ன அன்பு, குழந்தை மனத்திலே!" என உடல் சிலிர்த்தேன். திடீரென்று அந்த விஷயம் நினைவு வந்தது. ஆம்! முழுக்க முழுக்க இரண்டு ஆண்டு ஆகியும் குழந்தை மறக்கவில்லை; ஆம்! அன்பு மறக்கும்; வன்மம் மறக்குமோ?

ஆனால் மனசைத் திடம் செய்துகொண்டுவிட்டேன். அன்பைப் புகுத்தவும், வெறுப்பை அகற்றவுந்தானே வந்தேன், அவளை நாடி?

பாலாவை ஆசை தீர, என் ஆவல் ஆற எடுத்துக் கொஞ்சி, விளையாட்டுக் காட்டினேன். அவள் எங்களையே சுற்றி சுற்றி வந்து, களிப்பைதைக் கண்டு, என் முயற்சி பயனளிக்கும் என்ற நம்பிக்கை கொண்டேன்.

உணவு கொண்ட பிறகு எல்லோரும் கூடத்திலே கூடியிருந்தோம். அவர் முதுகுப் புறம் பாலா. என் மடியிலே சின்னக்குழந்தை. அவருக்கு இளங் குழந்தைகளை எடுக்கத் தெரியாது! மைத்துனர், மன்னி, ஆக ஆறுபேர் இருந்தோம். எதிரே ஒரு புகைப்படம். எனக்கு உகர்ந்த சந்தர்ப்பம். விடுவேனா?

புகைப்படத்தை எடுத்து கேள்வி போட்டேன். அவள் மனம் சொல்லத் தூண்டலாம், எங்கள் மேலுள்ள மறவாத அடையாளங்களைச் சேர்த்து, எங்களை காட்ட. வெற்றுச் சித்தப்பா, சித்தி என்று கூறாமல், அடித்த சிற்றப்பாவையும், கண்ணிலே சீயக்காய்ப்பொடி தூவிய சித்தியையும் அவள் காட்டலாமே!

பாலா பார்த்தாள் படத்தை. "தோ! ரெயில் வண்டி வாங்கித் தந்த சித்தப்பா! பட்டுச் சட்டை தந்த சித்தி!" என்று பதில் வந்தது. நானும் அவரும் திகைத்தோம்.

"அடி கள்ளி! அப்பொ வாங்கித் தந்த சின்ன சாமான்களைச் சொல்றயே! இப்ப வாங்கிண்டு வந்த நிஜக் குட்டி மோட்டார், பொம்மை, டோலாக்கு எல்லாம் சொல்லமாட்டேங்கறயே?" என்று கேட்டார் மைத்துனர், அவளை.

"லேசுபட்டவளா பாலா?" எனக் கணவரை ஆமோதித்தாள் மன்னி. எனக்கு மட்டும் ஒன்றும் விளங்கவில்லை. இப்போது வாங்கி வந்ததைச் சொல்லியிருந்தாளானால், அவளுடைய அபிப்பிராயம் மாறிவிட்டது எனக் கொள்ளலாம். ஆனால் . . .

'அம்மா தவறாகச் சொன்னாளா? அவ்வளவு தவறுமா?' என்பது புதிராக இருந்தாலும் என் மனப் பாரம் குறைந்தது. நான் செவியுற்றது குளிர் மொழி அல்லவா?

நாங்கள் இருவரும் எங்கள் ஊர் மீளக் கிளம்பினோம். ரெயிலடிக்கு வர மன்னிக்கு சௌகரியம் இல்லை. மைத்துனரும் பாலாவும் வந்தார்கள்.

சிற்றப்பா அடித்ததையும், சித்தி கண்ணிலே சீயக்காய் போட்டதையும் மறந்தேவிட்டாளா பாலா? பாலாவையே கேட்டால், அவள் மீண்டும் நினைவு கூர்ந்துவிட்டால்? இதை அஞ்சி, நான் ஸ்டேஷனிலே மைத்துனரைக் கேட்டேன். பாலா கணவர் தோள்மீது இருந்தவாறே பராக்குப் பார்த்துக்கொண்டு இருந்தாள்.

"மறந்துட்டாளே! நீங்கள்தாம் மறக்கவில்லை போலிருக்கு" என்றார் மைத்துனர், சிரித்துவிட்டு.

நான் அவ்வாறு கேட்ட காரணம் கூறிவிட்டு, அதற்கு நானே சிரிப்பு மூலம் நயம் கொடுத்தேன்.

"ஓ, அதுவா? ஆமாம்! அங்கே அப்படித்தான் சொன்னாள்போல் இருக்கு. இங்கே வந்தப்புறம், அன்றைக்குச் சொன்னாளே, அதுமாதிரிதான் சொல்றாள்" என்றார் மைத்துனர்.

"அது எப்படி? வேடிக்கையாயிருக்கிறதே!"

"வேடிக்கைதான் இப்பொ . . . ஆனால் அப்பொ . . ." பிறகு குரலைச் சற்று தாழ்த்தித் தகவலைத் தளர்த்தினார் மைத்துனர்.

"எல்லாம் பாட்டியண்டை இருந்திருந்தால் இப்பவும் அப்படித்தான் சொல்லியிருப்பாள்" என்றார். ஓஹோ! ஏனாம்? மைத்துனர் சொன்னது கேட்டு நான் மலைத்தேன்.

மன்னி தன் அன்னையிடம் ஏதோ கஷ்டம் குறை சொல்லிக்கொண்டார்போல் இருக்கிறது. அந்த அம்மாள், பாலாவின் பாட்டி, அதை மறந்துவிட முடியவில்லை. பேத்தியை அங்கே கொஞ்சநாள் நிறுத்திக்கொண்ட பாட்டி, பேத்தியை கொஞ்சி மகிழும்போதெல்லாம் அருமையாகச் சித்தி சிற்றப்பாவைப் பற்றியும் விசாரித்து, கேள்வி கேட்டுச் சமாதானமும் கற்றுந் தந்து விட்டாள் போலும்! மைத்துனர், தம் பெண்ணை அழைத்துவரப் போனபோது, பாலா இவ்வாறு கூறுவது கேட்டுத் திகைத்தாராம். ஆனால், பாலாவின் முகத்தைக் கொஞ்சம் ஆராய்ந்ததும் உண்மை ஒருவாறு புலனாயிற்றாம். துளி வெறுப்பு, துளி கோபம் அவள் முகத்திலே இல்லையாம். கண்களிலே அபிமானம் துள்ளிற்றாம்; சிரிப்பிலே ஆர்வம் பொங்கிற்றாம்; அதனால் விஷயத்தை ஒருவாறு ஊகித்தார். குழந்தையை 'மீட்டு' வந்ததும், முதல் காரியம் எங்களைப்பற்றி மாற்றிக் கூறப் பழக்கிவிட்டார். இப்பொழுது பேச்சு மாறிவிட்டது. ஆனால் அவள் சொல்லும் விதம், குமிழ்ச் சிவப்பு, கண்களில் ஜொலிப்பு எல்லாம் அதே மாதிரி; அவை மாறவில்லை!

ஆஹா! அப்படித்தான் இருக்கும். குழந்தை என்ன கண்டாள்? மனம் அன்பு மனம்தான்; சொன்னதைச் சொல்லும் பிள்ளை மனம், வெள்ளையுள்ளம்!

என் மனம் மைத்துனரின் ஊகத்தையும், குழந்தையின் மனத்தை அறியும் ஆற்றலையும் வியந்தது. எனினும் என் நாக்குச் சும்மா இருக்கவில்லை. "இனிமேல் மோட்டார், பொம்மை எல்லாம் சேர்த்துச் சொல்லப் பழகுவேள்! அவள் கண்டாளா, அம்மா பெற்ற அம்மாவின் அன்புக்கு இதெல்லாம் எந்த மூலை என்று?" எனக் குற்றம் சாட்டினேன். அவர் அதை மட்டும் ஒப்பவில்லை.

ரெயில் எங்களை ஏற்றிச் சென்_றபொழுது எனக்கு மனத்திலே ஒரு கற்பனையும் இல்லை. என் வயிற்றில் குழந்தை உதித்து, அது பூமியில் விழுந்து, வீரிட்டு அழும் நாளை எதிரப்பார்க்கும் மனம் இல்லை. அன்றொரு நாள் அவரிடம் அடிப்பட்டு பாலா வீரிட்டழுததும், இன்று எங்கள் பிரிவால் அவள் வீரிட்டு, அழுததுந்தான், மாறி மாறித் தோன்றின. குழந்தையின் அன்பு மனத்தைப் பற்றி ஐயம்கொண்டு, வருத்தத்தில் உழன்ற என் பேதமை வெட்கமுற்றது. வீரிட்டு அழ விரும்பிற்று!

**********

(கலைமகள், ஆகஸ்ட், 1949)